பக்கங்கள்:-20

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | கார்த்திகை 14 | வெள்ளிக்கிழமை | 29.11.2024 | அதிர்வு 119

## மேலும் 3 நாள்களுக்கு A/L பரீட்சை ஒத்திவைப்பு

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை மேலும் மூன்று நாள்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர அறிவித்தார்.

கொழும்பில் நேற்று 05




# வடக்கில் படை வசமுள்ள காணிகளை விடுவிப்போம்

## யாழில் பாதுகாப்பு அமைச்சின் செயலர் உறுதி

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கில் பாதுகாப்புப் படைகளின் வச முள்ள காணிகள், தேசிய மக்கள் சக்தியின் இந்த ஆட்சிக் காலத்தில் விடுவிக்கப்படும் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலா ளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பந் துய கொத்தாவ உறுதியளித்தார்.

ஜனாதிபதியின் பணிப்புக்கமைய வெள்ள அனர்த்த நிலைமை தொடர்பில் நேரில் பார்வையிட நேற்று யாழ்ப்பாணம் வந்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளரி டம், வடக்கில் பாதுகாப்புப் படைகளின் வச முள்ள காணிகள் விடுவிக்கப்படுமா? என்று ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பி னர். அதற்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். 05

# சீரற்ற காலநிலையால் 13 பேர் சாவு!

## 3 இலட்சத்து 77 ஆயிரம் பேர் பாதிப்பு



இலங்கையில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக அனர்த்தங்களில் சிக்கி இதுவரை 13 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அனர்த்த முகாமைத் துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

மழை, வெள்ளம் போன்ற அனர்த்தங்களால் ஒரு இலட்சத்து 13 ஆயி ரத்து 52 குடும்பங்களைச் சேர்ந்த 3 இலட்சத்து 77 ஆயிரத்து 511 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, அனர்த்தங்களால் 91 வீடுகள் 05




பேய் மழை. பெருவெள்ளம். மக்கள் பாதிப்பு உச்சம். இந்தச் சமயத்தில் அதிகாரிகளும் அரசியல் தலைவர்களும் நேரம் பார்க்காமல், முழுமூச்சாக மக்கள் தொண்டாற்ற வேண்டும்.

ஆனால், அதற்காக படம் காட்டக் கூடாது. ஆயினும் அப்படித்தான் விடயங்கள் நடக்கின் றன போல தெரிகிறது.

மழை வெள்ளம் என்றதும் வடக்கில் விடயங் களை கையாள்வதற்காக அதிகாரிகளைக் கூட்டி, கூட்டங்களை நடத்தி, விடயங்களை விவாதித்து, வழிகாட்டல்களை வழங்குகிறார் ஆளுநர். அது அவரின் பணி. தொடர்ந்து இத்தகைய வழிபடுத்தல் களை வழங்குவதற்காக அவர் அதிகாரிகளை சந்தித்த வண்ணம் இருக்க வேண்டும்.

ஆனால் அரசியல்வாதிகளோ ஒருபுறம் மழை வெள்ளம் என்றால், மறுபுறம் அவர்களின் அரசி யல் சித்து விளையாட்டு என்று இருக்கின்றார்கள்.

யாழ் மாவட்டத்தில் மட்டும் நேற்று முன்தினம் அரசு தரப்பில் மூன்று அரசியல்வாதிகள் மூன்று வெவ்வேறு கூட்டங்களை 05





# பருத்தித்துறை கடற்கரை வீதியில் இரண்டு இடங்கள் தாழிறங்கின

கடலரிப்பு காரணமாக பருத்தித்துறை கடற்கரை வீதியில் இரண்டு இடங்கள் தாழிறங்கிய காணப்படுகின்றன.

சீரற்ற காலநிலை காரணமாக தற்போது நாட்டில் பலத்த கன மழை பெய்து வரும் நிலையில், பருத்தித்துறை கடற்கரை வீதியில் துறைமுகத்துக்கு அருகாமையில் உள்ள பகுதியும், சாக்கோட்டை சவேரியார் ஆலயத்திற்கு அருகாமையில் உள்ள ஒரு பகுதியும் தாழங்கி காணப்படுகின்றன.

இந்நிலையில், தொடர்ச்சியாக மழை பெய்யும் நிலையில் தாழிறங்கிய பகுதி அரிப்பு ஏற்பட்டு மேலும் வீதி இடிந்து விழும் நிலை காணப்படுகிறது.

இவ் வீதி ஊடான போக்குவரத்து தற்போதும் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நாடாளுமன்றத் தெரிவுக்குழுக்களுக்கான வேட்புமனுக்களை சமர்ப்பிக்குமாறு அறிவிப்பு



நாடாளுமன்றத் தெரிவுக்குழுக்களுக்கான வேட்புமனுக்களை சமர்ப்பிக்குமாறு சபாநாயகர், கலாநிதி அசோக ரன்வல ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சிகளுக்கு அறிவித்துள்ளார்.

கோப் மற்றும் கோபா உள்ளிட்ட முக்கிய குழுக்கள் தெரிவுக் குழுக்களூடாக தெரிவு செய்யப்படுகின்றன.

இதற்கு ஆளுங்கட்சியைச் சேர்ந்த 8 உறுப்பினர்களும் எதிர்க்கட்சியைச் சேர்ந்த 4 உறுப்பினர்களும் நியமிக்கப் படவுள்ளனர்.

# இலக்கத் தகடு விநியோகிக்கும் பணிகள் மீண்டும் ஆரம்பம்




வாகன இலக்கத் தகடுகளை விநியோகிக்கும் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் டிசம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் பணத்தைச் செலுத்தி வாகன இலக்கத் தகடுகளைக் கொள்வனவு செய்ய முடியும்.

மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தற்காலிக வாகன இலக்கத் தகடுகளின் பயன்பாடு எதிர்வரும் டிசம்பர் மாதம் 15ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது.

அதற்கு பின்னர் தற்காலிக வாகன இலக்கத் தகடுகளைப் பயன்படுத்துபவர்களுக்கு எதிராக சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.



# பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வடமராட்சி பகுதிக்கு கள விஜயம்



சீரற்ற காலநிலை காரணமாக வடமராட்சி பகுதியில் அதிக பாதிப்புக்கு உள்ளான புனிதநகர் பகுதிக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் நேற்று விஜயம் மேற்கொண்டு கள நிலவரம் தொடர்பில் ஆராய்ந்தார்.

சீரற்ற காலநிலை காரணமாக பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புனித நகர் பகுதி வெள்ளத்தால் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது.

அங்குதிடீர்விஜயம்மேற்கொண்டபாதுகாப்புஅமைச்சின்செயலாளர் சம்பத் துய்ய கொண்டா வெள்ள நிலமை தொடர்பில் ஆராய்ந்ததுடன், அப்பகுதி மக்களுடனும் கலந்துரையாடினார்.

இதன் போது இப்பகுதியில் ஏற்பட்ட இடர்பாடு தொடர்பாக ஜனாதிபதியின் கவனத்திற்கு தான் கொண்டு செல்வதாக பொது மக்களிடம் அவர் உறுதியளித்துள்ளார்.














# நெடுந்தீவு நோயாளர்கள் மூன்று பேர் ஹெலி மூலம் யாழ் ஆஸ்பத்திரிக்கு!

## மேலதிக சிகிச்சைக்காகக் கூட்டி வரப்பட்டனர்





நெடுந்தீவு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற 03 நோயாளர்கள் மேலதிக சிகிச்சையளிக்கும் வகையில் விமானப்படையின் ஹெலி மூலம் யாழ் போதனா வைத்தியசாலைக்கு நேற்றை தினம் அனுப்பிவைக்கப்பட்டனர்.

நெடுந்தீவு வைத்தியசாலையின் ஏற்பாட்டில் நெடுந்தீவில் இருந்து 03 நோயாளரும் அவர்களது 3 உதவியாளர்களும் ஹெலி மூலம் பலாலி விமான நிலையம் கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து தரைவழியாக யாழ் போதனா வைத்திய சாலைக்குக் கூட்டிச் செல்லப்பட்டு அங்கு சிகிச்சைக்குச் சேர்க்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# இராமநாதன் அர்ச்சுனா எம்.பி. மீதான பிடியாணையை மீளப்பெற உத்தரவு



நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா மீதான பிடியாணையை மீளப் பெறுவதற்கான உத்தரவை கொழும்பு மேலதிக நீதவான் கேமிந்த பெரேரா நேற்று பிறப்பித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி ஊடாக நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்து நீதிமன்றத்தில் முன்னிலையாகியதை அடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 26 ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினர், வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனாவிற்கு எதிராக யாழ்.பிராந்தியத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஊடாக பிடியாணை பிறப்பிப்பதற்கு நீதவானால் உத்தரவிடப்பட்டது.

கொழும்பு, பேஸ்லைன் பகுதியில் காரொன்றை விபத்திற்குட்படுத்தி சாரதியை தாக்கி காயமேற்படுத்திய சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்காக நீதிமன்றத்தில் முன்னிலையாவதை தொடர்ச்சியாக நிராகரித்தமையால் அவருக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22 ஆம் திகதி இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அடுத்த வழக்கு விசாரணையை அடுத்த வருடம் மார்ச் மாதம் 4 ஆம் திகதி முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெள்ள விடயங்களை கையாள்வதற்காக தனித்தனியாக நடத்தி இருக்கிறார்கள். இவை மூன்றும் ஆளுநரின் வழமையான கூட்டத்துக்கு மேலதிகமானவை.

நேற்று முன்தினம் 27ஆம் திகதி வெள்ள அனர்த்த விடயம் குறித்து ஒரு விரிவான ஆய்வுக்கும் கலந்துரையாடலுக்குமாக பாதுகாப்புப் பிரதி அமைச்சர் அன்று பிற்பகல் 3 மணிக்கு வருகின்றார் என்று கூறப்பட்டது. இரு தினங்களுக்கு முன்பே இக்கூட்டம் பற்றி சம்பந்தப்பட்டவருக்கு தெரியும்.

அப்படி இருக்க அன்று காலையில் யாழ் மாவட்ட செயலகத்தில் அதிகாரிகளுக்கு உரிய வழிகாட்டல்களை வழங்க என்ற பெயரில் கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரன் ஒரு கலந்துரையாடலை நடத்துகிறார்.

அதன் பின்னர் ஆளும் தரப்பின் எம்.பியான இளங்குமரன் தனியாக ஒரு கலந்துரையாடலை முன்னெடுக்கிறார்.

இவர்கள் இருவரும் தனித்தனியாக வெள்ள அனர்த்த முகாமைத்துவத்துக்கான கூட்டங்களை நடத்தி முடித்து விட்டு போக, பாதுகாப்புப் பிரதி அமைச்சர், ஆளுநர், அனர்த்த முகாமைத்துவப் பணிப்பாளர் என முக்கியமான அனைவரும் பங்கு பற்றிய கலந்துரையாடல் பின்னர் நடைபெறுகின்றது.

ஒரே விடயத்துக்காக, ஆளும் தரப்பின் மூன்று அரசியல்வாதிகள் ஒரே நாளில், யாழ் மாவட்டச் செயலக அதிகாரிகளுக்கு தனித்தனியாக மூன்று கூட்டங்களை – கலந்துரையாடல்களை – ஏன் நடத்த வேண்டும்? புரியவில்லை.

நிவாரண வேலைகளிலும் பார்க்க, கூட்டம் போட்டுத் தத்தமது செல்வாக்கை அதிகாரிகளுக்கு காட்டுவது தான் அரசியல் தலைவர்களின் எண்ணமோ என்னவோ...?

\+ + +

நேற்று முன்தினம் கொழும்பில் வர்த்தக அமைச்சில் பணிபுரியும் நண்பர் ஒருவர் திடீரென தொலைபேசி அழைப்பு எடுத்தார்.

தங்கள் அமைச்சுக்கு இந்திய தூதரகத்தின் உயர்மட்ட அதிகாரிகள் வந்திருக்கின்றார்கள் என அவர் சொன்னார். அத்தகவலில் அதிசயமோ செய்தியோ இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

அதற்கு என்ன இப்போது என்று கேட்டேன்.

"சோழியன் குடுமி சும்மா ஆடவில்லை" –என்றார் என் நண்பர். எனக்கு விளங்கவில்லை. என்ன, ஏது என்று கேட்டேன்.

"நாட்டில் அரிசி பற்றாக்குறை. வெள்ளம் வேறு. இதனால் விளைந்த புதிய அரிசி சந்தைக்கு வருவதிலும் பாதிப்பு ஏற்படலாம். அதற்கிடையில் 70 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி சய்ய முடிவு செய்துள்ளதாக அரசு அறிவித்துள்ளது. வெள்ளத்தால் வடகிழக்கில் அரிசி உற்பத்தி பெரும் பிரச்சினையைச் சந்திக்கும் ஆபத்து உண்டு. இந்த சமயத்தில் அரிசி இறக்குமதி இன்னும் அதிகரிக்கச் சாத்தியங்கள் உள்ளன. அரிசியை இறக்குமதி செய்யும் அரசின் முடிவையும், வர்த்தக அமைச்சுக்கு இந்திய உயர்மட்டம் வருகை தந்தமையையும் சேர்த்து பார்த்து கூட்டி கழித்து தீர்மானியுங்கள்!" – என்றார் என் நண்பர்.

சோழியன் குடுமி சும்மா ஆடவில்லை தான்...!

# மாவீரர் நாளில் மகனுக்காக சுடரேற்றிய தந்தை இறப்பு!

முல்லைத்தீவு – முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தில் தனது மகனுக்காகச் சுடரேற்றிவிட்டுச் சென்ற தந்தை, தனது வீட்டில் திடீர் சுகவீனத்தால் உயிரிழந்துள்ளார்.

கப்டன் இசைக்கலைஞன் என்ற மாவீரரின் தந்தையான அமரசிங்கம் சண்முகலிங்கம் என்பவரே நேற்று முன்தினம் இவ்வாறு உயிரிழந்தவராவார்.

# மேலும் இரு பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட்டன

சீரற்ற காலநிலை காரணமாக நடைபெறவிருந்த இரண்டு பரீட்சைகள் பிற்படப்பட்டுள்ளன என பரீட்சை ஆணையாளர் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இதன்படி எதிர்வரும் டிசம்பர் மாதம் 1 ஆம் மற்றும் 2ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த சட்டக்கல்லூரி பொது நுழைவுத் தேர்வும், மக்கள் தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் தொடர்பான பரீட்சையும் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், இந்த பரீட்சைகள் நடைபெறும் திகதிகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு அறிவிக்கப்படும் எனவும் பரீட்சை ஆணையாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## மேலும் 3 நாள்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர்,

"நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் மூன்று நாள்களுக்கு உயர்தரப் பரீட்சையை ஒத்திவைப்பதற்கு முன்னதாகத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. டிசம்பர் 27, 28 மற்றும் 29 ஆகிய திகதிகளிலேயே பரீட்சையை நடத்துவதில்லை எனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், தற்போது மேலும் மூன்று நாள்களுக்குப் பரீட்சையை ஒத்திவைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்படி டிசம்பர் 3 ஆம் திகதி வரை பரீட்சை நடைபெறமாட்டாது.

டிசம்பர் 4 ஆம் திகதி புதன்கிழமை முதல் மீண்டும் பரீட்சை நடைபெறும். பரீட்சை அட்டவணையின் பிரகாரம் டிசம்பர் 4 ஆம் திகதிக்கென ஒதுக்கப்பட்டுள்ள பரீட்சைகளே அன்றைய தினம் இடம்பெறும்." – என்றார்.

அதேவேளை, பரீட்சை நடைபெறாத மேற்படி ஆறு நாள்களுக்குரிய பரீட்சைகள் டிசம்பர் 21 முதல் டிசம்பர் வரை நடைபெறும்.

அதற்கமைய நவம்பர் 27ஆம் திகதி ஒத்திவைக்கப்பட்ட பரீட்சைகள் டிசம்பர் 21ஆம் திகதி நடத்தப்படவுள்ளன.

நவம்பர் 28ஆம் திகதி ஒத்திவைக்கப்பட்ட பரீட்சைகள் டிசம்பர் 23ஆம் திகதி நடத்தப்படவுள்ளன.

நவம்பர் 29ஆம் திகதி ஒத்திவைக்கப்பட்ட பரீட்சைகள் டிசம்பர் 27ஆம் திகதி நடத்தப்படவுள்ளன.

நவம்பர் 30ஆம் திகதி ஒத்திவைக்கப்பட்ட பரீட்சைகள் டிசம்பர் 28ஆம் திகதி நடத்தப்படவுள்ளன.

டிசம்பர் 2ஆம் திகதி ஒத்திவைக்கப்பட்ட பரீட்சைகள் டிசம்பர் 30ஆம் திகதி நடத்தப்படவுள்ளன.

டிசம்பர் 3ஆம் திகதி ஒத்திவைக்கப்பட்ட பரீட்சைகள் டிசம்பர் 31ஆம் திகதி நடத்தப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிறிஸ்மஸ் பண்டிகையைக் கருத்தில் கொண்டு டிசம்பர் 24,25 மற்றும் 26 ஆம் திகதிகளில் பரீட்சைகள் நடைபெற மாட்டாது.

## சீரற்ற காலநிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முழுமையாகவும், 1,662 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

நாடளாவிய ரீதியில் 311 இடைத்தங்கல் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ள நிலையில், அந்த முகாம்களில் 10 ஆயிரத்து 431 குடும்பங்களைச் சேர்ந்த 32 ஆயிரத்து 695 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளர்.

## வடக்கில் படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"காணி விடுவிப்பு தொடர்பில் நாம் சிந்தித்து வருகின்றோம். அது தொடர்பில் நாம் மதிப்பீடு செய்துள்ளோம்.

பாதுகாப்பு மற்றும் ஏனைய காரணங்களின் அடிப்படையில் நாம் சில முடிவுகளை எடுத்துள்ளோம். நிச்சயமாக இந்த விடயத்தில் மக்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் செயற்படுவோம்.

நாம் ஏற்கனவே சில வீதிகளை விடுவித்துள்ளோம். காணிகளையும் விடுவிப்போம். இந்த நாட்டு மக்களின் நலன் குறித்து நாம் எப்போதும் கரிசனையுடையவர்களாகவே உள்ளோம்." – என்றார்.

# அஸ்வெசும திட்டத்திற்கான விண்ணப்ப காலம் நீடிப்பு

அஸ்வெசும திட்டத்திற்காக விண்ணப்பிப்பதற்கு வழங்கப்பட்ட கால அவகாசம் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் அனர்த்த நிலைமைகளை கருத்திற்கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அஸ்வெசும திட்டத்திற்காக விண்ணப்பிப்பதற்கு எதிர்வரும் டிசம்பர் 2 ஆம் திகதி வரை மாத்திரமே கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

எனினும் இதற்கான இறுதி திகதி தற்போது எதிர்வரும் டிசம்பர் 9 ஆம் திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

மழையுடனான வானிலையால் பாதிக்கப்பட்டுள்ள அஸ்வெசும நிவாரணத் திட்டத்திற்கு விண்ணப்பிக்க எதிர்பார்த்துள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் இதற்கான கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது.

# ஐஸ் ரக போதைப்பொருளால் உயிரை மாய்க்கும் இளைஞர்கள்



நாட்டில் உயிரை மாய்த்துக் கொள்பவர்களில் பெரும்பாலானவர்கள் ஐஸ் ரக போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று மாதங்களில் கம்பஹா மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலை ஒன்றில் 10 பேர் உயிரை மாய்த்துக் கொண்டு உயிரிழந்தனர்.

இவர்கள் அனைவரும் 16 முதல் 65 வயதிற்கு இடைப்பட்டவர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவர்களில் 4 பேர் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் எனத் தெரிய வந்துள்ளது.

ஐஸ் ரக போதைப்பொருள் பயன்பாடானது உடலில் குழப்பம், பதற்றம், விரைவான இதயத்துடிப்பு உள்ளிட்ட உடல் நலப்பாதிப்புகளை ஏற்படுத்துவதாக சுகாதாரத்துறையினர் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், தூக்கமின்மை, நினைவாற்றல் இழப்பு உள்ளிட்ட உடல் நலப்பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றமையால் இளைஞர்கள் இவ்வாறு உயிரை மாய்த்துக் கொள்ளும் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என தெரிவிக்கப்படுகிறது.



# உழவு இயந்திரம் மூழ்கிய சம்பவம் அதிபர், ஆசிரியருக்கு விளக்கமறியல்

அம்பாறை, காரைத்தீவு – மாவடிபள்ளி பாலத்திற்கு அருகில் உழவு வண்டி ஒன்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட சம்பவம் தொடர்பில், கைதான 4 பேரில் இருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான கைதான மதரஸா பாடசாலையின் அதிபர், ஆசிரியர் உள்ளிட்ட 4 பேர் நேற்று சம்மாந்துறை பதில் நீதவான் முன்னிலையில் பிரசன்னப்படுத்தப்பட்டனர்.

இதன்போது, மதரஸா பாடசாலையின் அதிபரையும், ஆசிரியரையும் எதிர்வரும் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

ஏனைய இருவரையும் பிணையில் செல்ல அனுமதிக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 26 ஆம் திகதி நிந்தவூர் பகுதியில் உள்ள மதரஸா பாடசாலை நிறைவடைந்ததும் அங்கு பயின்ற சில மாணவர்கள் உழவு இயந்திரத்தில் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.


மேற்படி மாணவர்களுக்கு வீட்டுக்குச் செல்ல பஸ் இல்லாத காரணத்தினால் மதரஸா பாடசாலையின் நிர்வாகம் மெத்தனப் போக்குடன் நடந்து கொண்டுள்ளதாக பொலிஸ் தெரிவித்துள்ளது.



அத்துடன், மாணவர்கள் பயணம் செய்த குறித்த வீதி ஆபத்தானது என்பதால் உழவு இயந்திரத்தில் அவர்களை ஏற்றிச் செல்ல வேண்டாம் என இராணுவத்தினரும் அறிவுறுத்தியுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

# ஆழ்ந்த தாழமுக்கம் இன்று முதல் குறையும்

## வளிமண்டலவியல் திணைக்களம் அறிவிப்பு




தென்கிழக்கு வங்காள விரிகுடா பகுதியில் ஏற்பட்ட ஆழ்ந்த தாழமுக்கம் காரணமாக, நிலவும் சீரற்ற காலநிலை இன்று முதல் படிப்படியாகக் குறைவடையும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

திருகோணமலைக்கு வடகிழக்கே சுமார் 110 கிலோமீற்றர் தொலைவில் நிலைகொண்டிருந்த ஆழ்ந்த தாழமுக்கம் நாட்டின் கிழக்கு கடற்கரையை அண்மித்து வடமேற்கு நோக்கி நகர்ந்து செல்வதாக அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, மறு அறிவித்தல் நாட்டை சூழவுள்ள ஆழமான மற்றும் ஆழமற்ற கடற்பகுதிகளுக்குச் செல்ல வேண்டாம் என வளிமண்டலவியல் திணைக்களம் கடல்சார் மற்றும் மீனவ சமூகத்தை அறிவுறுத்தியுள்ளது.

இதேவேளை, வடக்கு மாகாணத்தின் சில பகுதிகளில் 100 மில்லிமீற்றருக்கும் அதிகளவிலான பலத்த மழை பெய்யக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அந்த திணைக்களம் விடுத்துள்ள புதுப்பிக்கப்பட்ட அறிவித்தலில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடமத்திய, மேல், சப்ரகமுவ, வட மேல் மாகாணங்களிலும் திருகோணமலை மற்றும் காலி ஆகிய மாவட்டங்களிலும் இடைக்கிடையே மழை பெய்யக் கூடும்.

வடக்கு, கிழக்கு, மத்திய, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில் மணித்தியாலத்திற்கு 60 கிலோ மீற்றர் வரையில் காற்று வீசக் கூடும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஆஸியின் முன்மாதிரி

தீக்குச்சி கொண்டு விளக்கையும் ஏற்ற லாம், வீட்டையும் எரிக்கலாம். அதனைப் பயன்படுத்தும் முறையில் அதன் பயனும் பாதிப்பும் தங்கி உள்ளது.

அது போன்றதே விஞ்ஞான விருத்தி யும். விஞ்ஞானத்தின் உயர்வால் சமூகம் மேம்படும் வாய்ப்பு ஒரு புறமும் சமூகச் சீரழிவும் நாசங்களும் மறுபுறமுமாக இருப்பதை நாம் மறுக்க முடியாது.

உச்ச விஞ்ஞான விருத்தியின் ஒரு வடி வம்சமூக ஊடகங்கள்மூலமாகக்கிட்டுகின் றது.

சமூக ஊடகங்கள் ஒரு வகையில் சமு தாய நலனோம்பும் பண்பு கொண்டவை. ஆயினும் மறுபுறம் சமூகச் சீரழிவுக்கும் அவை காரணமாகி விடுகின்றன.

குறிப்பாக வளர்ந்து வரும் இளம் சமூ கத்தைச் சீரழிக்கும் மிகப்பெரிய ஆபத் தாக சமூக ஊடகங்கள் மாறி வருவது கவ னிக்கத்தக்கது. இந்த ஆபத்தை கவனத் தில் எடுத்து உலகிற்கு முன்மாதிரியாக நடவடிக்கை எடுத்திருக்கின்றது ஆஸ்தி ரேலிய நாடு.

அங்கு சிறுவர்களுக்கு சமூக ஊடகத் தடைக்கான சட்டம் நிறைவேற்றப் பட்டிருக்கின்றது.

ஆஸ்திரேலியாவில் 16 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் சமூக ஊடகங்களைப் பயன் படுத்துவதற்குத் தடைவிதிக்கும் ஆஸ்தி ரேலிய அரசின் திட்டத்துக்கு - சட்டத் துக்கு - அந்த நாட்டின் அனைத்து மாகா ணங்களும் ஆதரவு தெரிவித்திருக்கின் றன.

இது குறித்து காணொலி மூலம் ஆஸ்தி ரேலியப் பிரதமர் அன்டனி அல்பானீஸ் எட்டு மாகாணங்களின் தலைவர்களுடன் ஆலோசனை நடத்தினார். அதற்கு ஒத்து ழைப்பு நல்கி அத்தகைய சட்டத்தை அமல்படுத்துவதற்கு அவர்கள் முழு ஆத ரவு தெரிவித்தனர்.

முன்னதாக, சிறுவர்கள் சீரழிவதைத் தடுக்கும் வகையில் 16 வயதுக்குட்பட் டவர்கள் சமூக ஊடகங்களைப் பயன்படுத் துவதற்குத் தடை விதிக்கும் சட்டத்தை உலகிலேயே முதல்முறையாக ஆஸ்தி ரேலிய இயற்றவிருப்பதாக பிரதமர் அன்டனி அல்பானீஸ் இந்த மாதம் அறி வித்தார்.

அதைத் தொடர்ந்து, அந்தச் சட்டத் துக்கான பிரேரணை நாடாளுமன்றத் தில் தாக்கல் செய்யப்பட்டு நிறைவேற் றப்பட்டுள்ளது. சட்டம் இயற்றப் பட்டாலும் அதை செயல்படுத்த நிறு வனங்களுக்கு ஓராண்டு கால அவகா சம் வழங்கப்படுகின்றது.

உலக அளவில் சமூக வலைதளப் பயன்பாடுகளின் சேவை அதிகரித்து வருகிறது. இதனால் அவற்றைப் பயன்படுத்தும் பயனர்களின் எண்ணிக் கையும் நாள்தோறும் அதிகரித்து வரு கிறது. அந்த வகையில், சிறுவர்க ளும் சமூக வலைதளங்களை அதிகள வில் பயன்படுத்தி வருகின்றனர். இது, அவர்களுடைய படிப்பு மற்றும் இதர செயல்பாடுகளுக்கு பாதிப்பை ஏற்படுத்துதாக பெற்றோர் தரப்பிலும் முறைப்பாடு கூறப்பட்டு வருகிறது.

ஆஸ்திரேலியாவில் சமீபத்தில் மேற் கொள்ளப்பட்டகணக்கெடுப்புஒன்றில் சமூக வலைதளங்களை பயன்படுத் தும் சிறார்களின் எண்ணிக்கை அபாய கரமான அளவில் அதிகரித்துள் ளமை கண்டறியப்பட்டது. இதனால் சிறார்கள் மீதான வன்முறைகள், பாலி யல் குற்றங்கள் பெருகத் தொடங்கி இருக்கின்றன எனவும் சமூக ஆர்வலர் கள் கூறினர்.

இந்த நிலையில்தான், குழந்தை களின் பாதுகாப்பு நலன் கருதி ஆஸ் திரேலியாவில் உள்ள 16 வயதுக்குட் பட்டோர் சமூக வலைதளங்களைப் பயன்படுத்துவதற்கு தடை விதிக்க முடிவு செய்யப்பட்டிருப்பதாக அந் நாட்டு பிரதமர் கூறியிருந்தார்.

இந்தச் சட்டத்தின் மீது ஆஸ்தி ரேலியா நாடாளுமன்றத்தில் விவாதம் நடைபெற்று நேற்று முன்தினம் கீழ் சபையில் பிரேரணை நிறைவேற்றப் பட்டது. இந்தப் பிரேரணைக்கு நாடாளுமன்றத்தில் 102 வாக்குகள் ஆதரவாகவும், 13 வாக்குகள் எதிரா கவும் கிடைத்தன.

பின்னர் அந்தப் பிரேரணை நேற்று மாலை செனட் சபையில் நிறைவேற்றப் பட்டது. எனவே, இப்போது இந்தப் பிரேரணை சட்டமாக மாறுவது உறுதி யாகிவிட்டது. 2025 நவம்பர் மாதம் இந்த சட்டம் முழு அளவில் நடை முறைக்கு வரவுள்ளதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது. 'பயோமெட்ரிக்' உள்ளிட்ட அரசு தரவுகளைக் கொண்டு வயது சரிபார்க்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

இதுபோன்ற சமூகப் பாதுகாப்புச் சட்டங்கள் குறித்து இலங்கை போன்ற மூன்றாம் மண்டல நாடுகளும் சிந் திக்க வேண்டும்.



# ஜார்க்கண்ட் மாநில முதல்வராக ஹேமந்த் சோரன் பதவியேற்பு

## கார்கே, ராகுல், உதயநிதி பங்கேற்பு

ஜார்க்கண்ட் முதல்வராக ஹேமந்த் சோரன் நேற்று பதவியேற்றுக்கொண்டார். அவருக்கு ஆளுநர் சந்தோஷ் குமார் கங்வார் பதவிப் பிரமாணமும் இரகசிய காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார்.

இந்த நிகழ்வில் கார்கே, ராகுல் காந்தி, மம்தா பானர்ஜி, அகிலேஷ் யாதவ், உதயநிதி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

ஜார்க்கண்டில் சமீபத்தில் நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா தலைமையிலான இண்டியா கூட்டணி மொத்தமுள்ள 81 தொகுதிகளில் 56 இடங்களைக் கைப்பற்றியது.

இதில், ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா 34 தொகுதிகளிலும், காங்கிரஸ் 16 தொகுதிகளிலும், ராஷ்ட்ரிய ஜனதா தளம் 4 இடங்களிலும், சி.பி.ஐ-எம்.எல் 2 இடங்களிலும் வெற்றி பெற்றன. பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி 24 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றது. ஜார்க்கண்ட்டில் முதல்முறையாக ஒரு அரசு 5 ஆண்டுகளை பூர்த்தி செய்து மீண்டும் ஆட்சி அமைப்பது இதுவே முதல்முறை.

இண்டியா கூட்டணியின் வெற்றியை அடுத்து, முதல்வர் பதவியை இராஜினாமா செய்த ஹேமந்த் சோரன், கடந்த 24 ஆம் திகதி ஆளுநரைச் சந்தித்து ஆட்சி அமைக்க உரிமை கோரினார்.

இதனையடுத்து அவரை ஆட்சி அமைக்க ஆளுநர் அழைப்பு விடுத்தார்.

ராஞ்சியில் உள்ள மொராபாதி மைதானத்தில் நடைபெற்ற பதவி ஏற்பு விழாவில் ஜார்க்கண்ட்டின் 14 ஆவது முதல்வராக ஹேமந்த் சோரன் பதவியேற்றார். அவருக்கு ஆளுநர் சந்தோஷ் குமார் கங்வார் பதவிப் பிரமாணமும் இரகசிய காப்புப் பிரமாணமும் செய்துவைத்தார்.

இந்த பதவி ஏற்பு விழாவில், காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன் கார்கே, மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி, மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி, சமாஜ்வாதி கட்சி தலைவர் அகிலேஷ் யாதவ், ஆம் ஆத்மி கட்சி தலைவர் அரவிந்த் கெஜ்ரிவால் மற்றும் அவரது மனைவி சுனிதா கெஜ்ரிவால், பஞ்சாப் முதல்வர் பகவந்த் மான், தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், ஆர்.ஜே.டி. தலைவர் தேஜஸ்வி யாதவ் உள்ளிட்ட தலைவர்கள் கலந்து கொண்டனர்.

# மீனவர்கள் கடலுக்கு செல்வதை தடுக்க படகுகளுக்கான டீசல் நிறுத்திவைப்பு



வங்கக் கடலில் புயல் சின்னம் உருவாகி உள்ளதன் எதிரொலியாக, மீனவர்கள் கடலுக்கு செல்வதைத் தடுக்கும் வகையில் மீன்பிடி படகுகளுக்கான டீசல் மானியம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக மீன்வளத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சென்னை எண்ணூர் நெட்டுக்குப்பம் முதல் திருவான்மியூர் குப்பம் வரை 2,300 செயற்கை இழை படகுகளும், 772 விசைப் படகுகளும் உள்ளன. இந்தப் படகுகளுக்கு எண்ணூர், ராயபுரம், காசிமேடு ஆகிய பகுதிகளில் உள்ள பெட்ரோல் நிரப்பும் நிலையங்களில் மானிய விலையில் டீசல் வழங்கப்பட்டு வருகிறது.

இதன்படி, பைபர் படகுகள் மற்றும் செயற்கை இழை படகுகளுக்கு தலா 4 ஆயிரம் லிட்டர் டீசலும், விசைப் படகுகளுக்கு தலா 20 ஆயிரம் லிற்றர் டீசலும் மானிய விலையில் வழங்கப்படுகிறது.

தற்போது, வங்கக் கடலில் ஏற்பட்டுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம் புயலாக மாறும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதனால், மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

எனவே, மீனவர்கள் மீன்பிடிக்க செல்வதைத் தவிர்க்கும் பொருட்டு படகுகளுக்கு வழங்கும் மானிய டீசல் விற்பனை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மறு அறிவிப்பு வரும் வரை இந்த நடைமுறை தொடரும் என மீன்வளத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# டொனால்ட் ட்ரம்ப்புடன் மார்க் ஸுகர்பெர்க் சந்திப்பு



அமெரிக்க ஜனாதிபதியாக தேர்வாகி உள்ள டொனால்ட் ட்ரம்ப்பை மெட்டா நிறுவன சி.இ.ஓ. மார்க் ஸுகர்பெர்க் நேற்று முந்தினம் புளோரிடாவில் சந்தித்துள்ளார்.

இது குறித்து ட்ரம்ப்பின் இரண்டாவது ஆட்சி காலத்தில் வெள்ளை மாளிகையின் துணை தலைமை அதிகாரியாக செயல்பட உள்ள ஸ்டீபன் மில்லர் தெரிவிக்கையில்,

“அனைத்து தொழில் நிறுவன தலைவர்களும் ட்ரம்ப்பின் பொருளாதார திட்டங்களுக்கு ஆதரவு தெரிவிப்பது போலவே மார்க் ஸுகர்பெர்கும் சந்தித்து தனது ஆதரவை தெரிவித்தார். அதில் அவர் உறுதியாக உள்ளார். அது அவரது ஆர்வமாக உள்ளது” என்றார்.

புதிதாக அமையவுள்ள அரசு நிர்வாகம் குறித்து ட்ரம்ப் உடன் கலந்து பேச புதன்கிழமை அன்று இரவு உணவில் பங்கேற்க மார்க் ஸுகர்பெர்குக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அதன்படி அவர் அதில் பங்கேற்றார். அப்போது ட்ரம்ப் குழுவினரும் இருந்தனர் என்பதை மெட்டா செய்தித் தொடர்பாளர் உறுதி செய்துள்ளார்.

# ட்ரம்ப் நியமித்த அமைச்சர்கள், அதிகாரிகளுக்கு அச்சுறுத்தல்







அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்று புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில், ஜனவரி 20 ஆம் திகதி பதவி ஏற்கவுள்ளார்.

இந்தநிலையில், அவரது அமைச்சரவையில் இடம் பெறக்கூடிய அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளை நியமித்து வருகிறார்.

இலான் மஸ்க், விவேக் ராமசாமி ஆகியோருக்கு முக்கிய பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், டொனால்ட் ட்ரம்பால் நியமிக்கப்பட்ட அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் சிலருக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து அவர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் நியூயோர்க்கிலிருந்து முக்கிய பதவியொன்றுக்கு தெரிவு செய்யப்பட்ட எலிஸ் ஸ்டெபானிக் உள்ளிட்டோருக்கும் மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



# செங்கடலில் சுற்றுலாப்பயணிகள் சென்ற படகு கவிழ்ந்து விபத்து; 5 பேர் உயிரிழப்பு

செங்கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளான படகிலிருந்து 5 பேர் சடலங்களாகவும் மீட்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், 28 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

மேலும் 7 பேரைத் தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

44 சுற்றுலாப்பயணிகளுடன் பயணித்த படகொன்றே கடந்த திங்கள் கிழமை விபத்துக்குள்ளாகியிருந்தது.

இவ்வாறு உயிரிழந்தவர்களில், பெல்ஜியம் நாட்டை சேர்ந்த இருவரும் சுவிஸ்ஷர்லாந்து பிரஜை ஒருவரும், எகிப்தியர்கள் இருவரும் அடங்குகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.









# யாழ்.வெள்ள அனர்த்தம் தொடர்பில் விசேட கூட்டம்

## பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் பங்கேற்பு

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைவாக யாழ்ப்பாணம் மாவட்டத்தின் வெள்ள அனர்த்த நிலைமை தொடர்பில் ஆராயும் விசேட கூட்டம் யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று மாலை கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பந் துயகொத்தாவ, அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் உதய ஹேரத் ஆகியோரின் பங்கேற்புடன் நடைபெற்றது.

தற்போதைய வெள்ள அனர்த்த நிலைமை தொடர்பில் பிரதேச செயலர்களால் சுட்டிக்காட்டப்பட்டது. தமது பிரதேசத்தில் அதிகூடிய பாதிப்பு ஏற்பட்ட இடங்கள் தொடர்பில் சுட்டிக்காட்டிய பிரதேச செயலர்கள் எதிர்காலத்தில் அங்கு மேற்கொள்ள வேண்டிய வெள்ளத் தணிப்பு நடவடிக்கைகளுக்கான நிதி ஒதுக்கீட்டுக்கும் கோரிக்கை விடுத்தனர்.

குறிப்பாக இடர் காரணமாக இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு மாத்திரமே சமைத்த உணவு உள்ளிட்ட நிவாரணங்கள் வழங்கக் கூடியதாக இருப்பதாகவும், உறவினர் மற்றும் நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ளவர்களுக்கும் அவ்வாறான உதவிகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

பல இடங்களில் ஆபத்தான மரங்களை அகற்றுவதற்கு மரக்கூட்டுத்தாபனத்தின் ஒத்துழைப்பு போதியளவு தேவையாக இருப்பதாக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் இங்கு குறிப்பிட்டார்.

மேலும் தீவுப் பகுதிகளுக்கான மின்சாரத்துக்குரிய எரிபொருளை விரைந்து வழங்குவதற்கு கடற்படையினரின் ஒத்துழைப்பை ஆளுநர் கோரினார். கடற்படையினர் அதற்குச் சாதகமான பதிலை வழங்கினர்.

இங்கு கருத்து வெளியிட்ட கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர், பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை மேற்கொள்வதற்கு வடக்கு மாகாண ஆளுநர் முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்கி வருவதாகவும், அதற்கு நன்றி தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டார். அத்துடன் வடக்கு மாகாண ஆளுநராக நா.வேதநாயகன் நியமிக்கப்பட்ட பின்னர் பல வேறு பணிகளைச் செய்துள்ளார் எனவும், அவை வெளியில் தெரியவில்லை எனவும் குறிப்பிட்ட அவர், அதனைப் பட்டியலிட்டு மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்றார்.

இங்கு கருத்துத் தெரிவித்த ஆளுநர், இந்தக் கடினமான நேரத்தில் அனைத்து அதிகாரிகளும், முப்படையினரும், பொலிஸாரும் ஒருங்கிணைந்து பணியாற்றினர். அதற்கு முதலில் நன்றி தெரிவிப்பதாகக் குறிப்பிட்ட அவர் எதிர்காலத்திலும் இவ்வாறு ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

குறிப்பாக வெள்ளவாய்க்கால்களை ஆக்கிரமித்து அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத கட்டடங்களை உடனடியாக இடித்தகற்றுவதற்குச் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி சபைகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிய ஆளுநர், வீதி அபிவிருத்தி திணைக்களம் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை என்பன மக்கள் வீடுகள் அமைக்கும்போது பெற்றுக்கொண்ட அனுமதிக்கு அமைவாக உரிய இடைவெளிகளில் வீடுகளை அமைக்கின்றார்களா என்பதைக் கண்காணிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

மேலும் கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர், இடர் நிலைமையின்போது முன்னெடுத்த கண்காணிப்பு நடவடிக்கை மற்றும் நிவாரண நடவடிக்கைகளுக்கும் ஆளுநர், நன்றிகளைத் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பந் துயகொத்தாவ கருத்துத் தெரிவிக்கையில்,

"நாட்டில் ஏற்பட்ட அனர்த்த நிலைமைகளை ஆராய்வதே இந்தக் கலந்துரையாடலின் நோக்கமாகும்.

இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு

தொடர்ச்சி▼







# யாழ்.வெள்ள அனர்த்தம் தொடர்பில் விசேட கூட்டம்

## பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் பங்கேற்பு





தொடர்ச்சி▲

உணவு, மருந்துகள் இடையூறு இன்றி சீராக விநியோகிக்க திறைசேரி விசேட ஒதுக்கீடுகளை காலதாமதமின்றி ஒதுக்க வேண்டும்.

இயற்கை அனர்த்தத்தால் அதிகளவு பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு அதிகாரிகள் நேரடியாகச் சென்று தீர்வு வழங்க வேண்டும்.

சகல மாவட்டங்களிலும் முப்படையினர் போக்குவரத்து வசதிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தற்போதைய சீரற்ற காலநிலை காரணமாக தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையை டிசம்பர் மாதம் 4 ஆம் திகதியிலிருந்து நடத்த பரீட்சைத் திணைக்களத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது

இயற்கை அனர்த்தத்தால் சேதமடைந்த வீடுகளுக்கான நிவாரணம் அந்த மக்களுக்குகே கிடைக்க அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

டெங்கு நோய் மற்றும் ஏனைய தொற்றுநோய்கள் வராமல் தடுக்க வேண்டிய பொறுப்பும் உள்ளது. இயற்கை அனர்த்தத்தில் இருந்து பாதுகாக்க நிரந்தர தீர்வை அனைவருடனும் இணைந்து காண வேண்டும். இதற்கு முப்படையினரின் உதவிகளையும் பெற்றுக்கொள்ளலாம்.” – என்றார்.

இந்தக் கூட்டத்தில் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான வைத்திய கலாநிதி சண்முகநாதன் ஸ்ரீபவானந்தராஜா, ஜெயசந்திரமூர்த்தி ரஜீவன், வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் (காணி) க.ஸ்ரீமோகனன், யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரதிப் பணிப்பாளர் ரி.என். சூரியகுமார், முப்படைகளின் உயர் அதிகாரிகள், வடக்கு மகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், பிரதேச செயலாளர்கள் திணைக்களத் தலைவர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# யாழ் ராணி ரயில் சேவை நடைபெறாது மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தம்!

யாழ் ராணி சேவை மறு அறிவித்தல்வரை நடைபெறாது என ரயில்வேத் திணைக்கள வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

என்ஜின் பழுதடைந்து அநுராதபுரத்தில் நிற்பதால் இந்தச் சேவையை நடத்த முடியாதிருப்பதாக பிராந்திய ரயில்வே முகாமையாளர் அறியத்தந்தார்.

அதனை இரத்மலானைக்கு அனுப்பியே சீர்செய்ய முடியும் என்றும், அதற்கு எத்தனை நாள் எடுக்கும் எனக் கூற முடியாது எனவும் அவர் கூறினார்.

முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவராக இருந்த காலப்பகுதியில், அவரது தீவிர முயற்சியால் இந்தச் சேவை ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணத்திலிருந்து தினமும் கிளிநொச்சி மாவட்டத்துக்குத் தொழில் நிமித்தம் பயணிக்கும் அரச சேவையாளர்கள், தனியார்துறைப் பணியாளர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பணியாளர்கள், மாணவர்களின் நலன் கருதி, 2022 ஜுலை மாதம் 11 ஆம் திகதி இந்தச் சேவை ஆரம்பிக்கப்பட்டது.

அறகலய போராட்டம் தெற்கில் உச்சமடைந்து, போக்குவரத்து அமைச்சரும் இராஜினாமாச் செய்த நிலையிலும், முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தற்றுணிவான நடவடிக்கையால், திட்டமிட்டபடி குறித்த தினத்தில் அந்தச் சேவை ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

வடக்கின் முதலாவது பிராந்திய ரயில்வே சேவையாக, காங்கேசன்துறை முதல் அறிவியல்நகர் வரையில் நடாத்தப்பட்ட இந்தச் சேவை, யாழ் – கொழும்பு ரயில் சேவை தடைப்பட்டிருந்த காலத்தில் அநுராதபுரம் வரையில் நீடிக்கப்பட்டு, வடக்கில் தடையின்றிய ரயில் சேவையாக தொடர்ந்து நடைபெற்று வந்தது.

இடையிடையே பல்வேறு காரணங்களால் இந்தச் சேவை நெருக்கடிகளைச் சந்தித்தபோதிலும், முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலையீட்டினால் சேவை தடைப் படாமல் தொடர்ந்து நடைபெற்றது.

இறுதியாக, கடந்த ஜனாதிபதி தேர்தல் காலத்தில் இது போல் ஓர் இடையூறு ஏற்பட்டபோது, கிளிநொச்சிக்கு தேர்தல் பிரசாரத்துக்கு வருகை தந்திருந்த முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேசி, முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் ஒரே நாளில் நிலைமை சீராக்கப்பட்டிருந்தது.

இப்போது இந்தச் சேவை தடைப்பட்டிருப்பதால் தினமும் கிளிநொச்சிக்குத் தொழில் நிமித்தம் பயணம் செய்யும் நூற்றுக்கணக்கானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# மஸ்கெலியா நோட்டன் பிரதான வீதியில் மண் திட்டுகள் பல சரிந்து வீழ்ந்துள்ளன!

கடந்த சில நாள்களாகத் தொடர்ந்து பெய்து வரும் கன மழை காரண மாக மஸ்கெலியா நோட்டன் பிரதான வீதியில் பல ,டங்களில் மண் திட்டுகள் சரிந்து விழுந்துள்ளன.

.தனால் வாகன சாரதிகள் மிகவும் அவதானமாகவாகனங்களைச்செலுத்து மாறு போக்குவரத்துப் பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர்.

மேலும் ,ப் பகுதியில் கடுமையான பனி மூட்டமும் காணப் படுகிறது. இதனால் வாகனங்களில் உள்ள மின் ஒளியை ஒளிரச் செய்து வாக னங்களைச் செலுத்துமாறும், மண் திட்டுகள் உள்ள பகுதிகளில் மிகவும் அவதானமாக செல்லும்படியும் வாகன சாரதிகளுக்கு மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி புஷ்பகுமார அறிவுரை வழங்கி வருகிறார்.

# மன்னம்பிட்டி தொடர்ந்தும் வெள்ளத்தில்!

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு பொலன்னறுவை வீதியில் கல்லேல்ல மன்னம்பிட்டி பிர தேசம் தொடர்ந்தும் மூடப்பட்டுள்ள தாக பொலன்னறுவை மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள் ளது.

அத்துடன், நேற்று பொலன்ன றுவை மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் மற்றும் தமன்கடுவ பிரதேச இணைப்பாளர் குழுவின் தலைவர் சுனில் ரத்னசிறி உட்பட பலர் இப்பகுதி யில் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.









# தென்மராட்சியில் அரச நிறுவனங்கள் வெள்ளநீரில் மிதக்கும் இக்கட்டுநிலை

(த.சுபேசன்)

தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்தசிலதினங்களாகபெய்துவரும்கன மழை காரணமாக அரச திணைக்கள அலுவகங்களுக்குள்ளும் நீர் புகுந்து சிரமத்தை ஏற்படுத்தியுள்ளது.

தென்மராட்சியின் கொடிகாமம் பகுதியில் அமைந்துள்ள பொலிஸ் நிலையம், சமுர்த்தி அலுவலகம், பிரதேசசபை, ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளிட்ட அரச திணைக்களங்களே இவ்வாறு வெள்ள அனர்த்தத்தை எதிர்நோக்கியுள்ளன.

அதேவேளையில் தென்மராட்சியில் ஏராளமான வீடுகள் மற்றும் மதஸ்தானங்களுக்குள்ளும் வெள்ள நீர் புகுந்துள்ளது. இவ்வாறு வெள்ள அனர்த்தத்தை எதிர்நோக்கிய வீடுகளில் இருந்து இடம்பெயர்ந்துள்ள ஆயிரத்திற்கும் அதிகமான பொதுமக்கள் 12இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.











# மட்டு. காந்திப் பூங்கா வளாகத்தில் பாரியமரம் நேற்று சரிந்து வீழ்ந்தது



**(பழுவூரான், கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு காந்திப் பூங்கா வளாகத்தில் நின்ற பாரிய மரம் வீசிய கடும் காற்றினால் சரிந்து வீழ்ந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்து அவ்விடத்துக்கு வருகை தந்த மட்டக்களப்பு மாநகர சபை ஊழியர்கள் அந்த மரத்தை வெட்டி அகற்றினர்.

மரம் வீழ்ந்ததனால் இரண்டு மோட்டார் சைக்கிள்களுக்குச் சிறு சேதமேற்பட்டுள்ளது.

தெய்வாதீனமாக வீதியால் பயணித்தவர்கள் எவருக்கும் எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை.

காந்திபூங்கா மற்றும் கந்தையா சிறுவர் பூங்காவில் உள்ள மேலும் பல மரங்கள் நேற்று நண்பகல் அடியேடு சரிந்து வீதியில் வீழ்ந்துள்ளன.



















# வவுனியா குடகச்சக்கொடி வயல்வெளியில் வீழ்ந்து கிடந்த யானை பாதுகாப்பாக மீட்பு

(கி.வசந்தன்)

வவுனியா குடகச்சக்கொடி வயல் வெளியில் சுகயீனம் காரணமாக கீழே வீழ்ந்து கிடந்த யானை ஒன்று வன ஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்களால் நேற்றுப் பாதுகாப்பாக மீடகப்பட்டுள்ளது.

கிராம மக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையிலேயே இந்த யானை மீட்கப் பட்டுள்ள. இந்த யானை எட்டு வயது மதிக்கத்தக்கது எனவும், மோசமான காலநிலை காரணமாக உணவு தேடிச் சென்ற வேளையில் வயல்களில் தவறி விழுந்துள்ளதாகவும் வன ஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை யானைக்கான சிகிச் சைக்காக இன்று கால்நடை வைத் திய அதிகாரி வரவுள்ளமை குறிப்பி டத்தக்கது.



# கலாவெவ தேசிய பூங்காவில் யானை மின் தாக்கி பலியானது

அநுராதபுரம், கலாவெவ தேசிய பூங்காவில் சுற்றித்திரிந்த யானை ஒன்று மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளது.

ஆடியாகல-கிங்குருவெவ பிரதேசத் தில் உள்ள வீடொன்றுக்கு முன்பாக பாதுகாப்பற்ற மின்சார கம்பியில் சிக்கி யானை உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

புகழ்பெற்ற யானையான 'தீகடந்து 1' மிக நீண்ட இரண்டு தந்தங்களைக் கொண்டுள்ளதுடன் 40 முதல் 50 வய துடைய யானை என்றும் கூறப்பட்டது.

இதன் காரணமாக உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்து அதிகமான சுற்றுலாப் பயணி களை இந்த யானையை பார்வை யிட்டு செல்கின்றமை வழக்கம் என்பது குறிப்பிடத்தக்கது.

# விசுவமடுவில் வீட்டிற்குள் புகுந்த சிறுத்தைப் புலி!





முல்லைத்தீவு, விசுவமடு – இளங் கோபுரம் பகுதியில் சிறுத்தைப்புலி ஒன்று வீடு ஒன்றிற்குள் புகுந்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட விசுவமடு, இளங்கோ புரம் கிராமத்தில் திடீரென சிறுத்தை புலி ஒன்று வீட்டிற்குள் உள்நுழைந் துள்ளது.

இதனையடுத்து வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு தகவல் வழங்கப் பட்டதனையடுத்து திணைக்களத்தின் அதிகாரிகள் வந்து புலியை மீட்டு கொண்டு சென்றுள்ளனர்.

தற்போது நிலவும் சீரற்ற கால நிலையால் காடுகளுக்கு அண்மையில் இருப்பவர்கள் அவதானமாக செயல்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள் ளது.

# வடக்கு – கிழக்கு வைத்தியசாலைகளில் பணிப்பாளர்கள் சிலருக்கு இடம்மாற்றம்

**(கி.வசந்தன்)**

வடக்கு – கிழக்கில் பணியாற்றும் சுகாதார சேவைகள் திணைக்கள பிரதி பணிப்பாளர் மற்றும் வைத்தியசாலை பணிப்பாளர்கள் சிலருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, வைத்தியர் ஆர்.முரளீஸ் வரன் மட்டக்களப்பு பிராந்திய சுகா தார சேவைகள் திணைக்கள பணிப் பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். வைத்தியர் ஜி.சுகுணன் மட்டக்களப்பு கல்முனை வடக்கு வைத்தியசாலை யின் பணிப்பாளராகவும், வைத் தியர் டி.வினோதன் மன்னார் பிராந் திய சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளராகவும், வைத்தியர் கே.ஜி. சீ.வை.எஸ்.வீ.வீரக்கோன் ஊவா மாகாண சுகாதார சேவைகள் திணைக் கள பணிப்பாளராகவும், திருமதி பி.எஸ். என்.விமலரட்ண கிழக்கு மாகாண சுகா தார சேவைகள் திணைக்கள பணிப் பாளராகவும், என்.சீ.டி.ஆரியரட்ண வவுனியா பொது வைத்தியசாலை பணிப்பாளராகவும், டபிள்யூ.ஏ.நி. கே.சீ.பீ.வீரவத்த கிளிநொச்சி பொது வைத்தியசாலை பணிப்பாளராகவும், டி.எம.ஏ.கே.திசாநாயக்க கிளிநொச்சி மாவட்ட பிரந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளராகவும், எஸ்.என்.வீ.பிரேமதாச முல்லைத்தீவு பொது வைத்தியசாலை பணிப்பாளரா குவம் நியமிக்கப்பட்டுள்ள னர்.

| | | | |
|---|---|---|---|
| 68 | Dr. Muraleeswaran R. | 62.05 | RDHS – Batticaloa |
| 69 | Dr. Sugunan G. | 62.00 | Director - BH/Kalmunai (North) |
| 70 | Dr. Vinodan D. | 61.87 | RDHS – Mannar |
| 71 | Dr. Weerakoon K.G.C.Y.S.B. | 61.75 | DPDHS – Uva Province |
| 72 | Dr. (Mrs) Wimalaratne P.S.N. | 60.75 | DPDHS – Eastern Province |
| 73 | Dr. Ariyaratne N.C.D. | 60.36 | Director - DGH , Vavuniya |
| 74 | Dr. Nishshanka W.A. | 60.04 | RDHS – Ampara |
| 75 | Dr. Azaath M.H.M. | 58.59 | Director - DGH, Mannar |
| 76 | Dr. Werawatte W K.C.P. | 57.89 | Director - DGH, Kilinochchi |
| 77 | Dr. Dissanayake D. M. A. K | 57.55 | RDHS – Kilinochchi |
| 78 | Dr. Rifaz I.L.M. | 56.89 | Not enough refference |
| 79 | Dr. Premadasa S.N.B. | 56.25 | Director - DGH, Mullathivu |

Dr. ASELA GUNAWARDENA
Director General of Health Services
Colombo 10.

எதிர்வரும் 2 ஆம் திகதிக்கு பின் அமுலுக்கு வரும் வகையில் இவ் நியமனங்கள் வழங்கப்பட்டுள் ளன.

# இன்றைய ராசி பலன்கள் - 29.11.2024




இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.உங்கள் நடவடிக்கைகளில் கவனம் தேவை.இன்று உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும்.

உங்கள் சகபணியாளர்களுடன் சச்சரவுகள் ஏற்படலாம்.பொறுமையுடன் இருந்து செயலாற்றவும்.

தொடர்பாடலில் உள்ள குறைபாடு காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். புரிந்துணர்வு மூலம் இதனை தவிர்க்கலாம்.

இன்று பணப் பற்றாக்குறை காணப்படும். இன்று காணப்படும் செலவினங்களை சமாளிக்க கடன் வாங்க நேரலாம்.

உங்களுக்கு கால்வலி ஏற்பட வாய்ப்புள்ளது. உடற் பயிற்சி மேற்கொள்வது நல்லது.




இன்றைய நாள் ஆக்கமுடைய நாளாக அமையும். சிறிய தொலைவிலான பயணமும் மற்றும் சில மாற்றங்களின் காரணமாக உங்கள் தைரியத்தையும் உறுதியையும் நீங்கள் இழக்க நேரலாம்.

குறித்த நேரத்திற்குள் கொடுக்கப்பட்ட பணியை முடிப்பது சற்று கடினமாக இருக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் மற்றும் உங்கள் துணையின் இடையே தொடர்பாடலில் இடைவெளி காணப்படும். இது உறவின் சீரமைப்பை கெடுக்கும். விஷயங்களை எளிதாக எடுத்துக் கொள்வது நல்லது.

நிதிநிலைமை சீராகவோ நல்ல முறையிலோ காணப்படாது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்வது இயலாது.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது.




உங்கள் மனதில் இருக்கும் குழப்பம் காரணமாக இன்று சிறிது அமைதியின்மை காணப்படும். இது உங்கள் முடிவெடுக்கும் திறமையை பாதிக்கும்.

உங்கள் பணிகளை ஆற்றும் போது கவனம் தேவை. இல்லாவிடில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. இது சிக்கலுக்கு வழிவகுக்கும்.

உங்கள் துணையுடன் தவறான புரிந்தணர்வு காணப்படும். இதனால் வாக்கு வாதங்கள் ஏற்படும். இத்தகைய சூழ்நிலையை தவிர்ப்பது நல்லது.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. திட்டமிடலின்மை காரணமாக நீங்கள்சில பிரச்சினைகளை சந்திக்க நேரும். இன்று சுறுசுறுப்பாக இருக்க வேண்டியது அவசியம்.

இன்று உங்களால் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிக்க இயலாது. தோள் அல்லது கணுக்கால் வலி காணப்படும்.




இன்று சற்று அனுகூலமற்ற நாளாக இருக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க இயலாத நிலை இருக்கும். இன்று பொறுமை அவசியம். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ளுங்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணியிடச் சூழலில் சுமூகமான நிலை இருக்காது. சக பணியாளர்களுடனான தொடர்பில் சில பிரச்சினைகள் காணப்படும்.

இன்று முழுவதும் உங்கள் துணையுடன் அமைதியாக கட்டுப்பாட்டுடன் பழகுங்கள். தேவையற்ற பேச்சுக்களை தவிர்க்கும் வகையில் நாவடக்கம் மேற்கொள்ளுங்கள்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். செலவுகள் அதிகமாக இருக்கும். உங்கள் தேவைகளுக்காக கடன் வாங்குவீர்கள்.




இன்று காணப்படும் சிறிய பிரச்சனைகளை கையாள கடின முயற்சி தேவை .

பணி வளர்ச்சியைப் பொருத்தவரை இன்று உகந்த நாள் அல்ல. இன்று பணிச்சுமை காணப்படும். பணியை திட்டமிட்டு ஆற்ற வேண்டும்.

இன்று மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் உங்கள் துணையுடன் உரையாடும் போது கவனம் தேவை. எந்த விஷயத்தையும் இலேசாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

நிதி சம்பந்தமான முக்கிய முடிவுகள் இன்று எடுப்பதை தவிர்க்கவும். பெரிய முதலீடுகள் முயற்சி இன்று ஏற்புடையதல்ல.

இன்று பல்வலி அல்லது செரிமானம் போன்ற பிரச்சினைகள் ஏற்படலாம். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.




இன்று சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். கடினமான சூழ்நிலைகளை சமாளிக்க மிகுந்த பொறுமை அவசியம். நம்பிக்கையுடன் செயல்பட்டால் பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமையும்.

இன்று அதிக பணிச்சுமைகள் காணப்படும். நீங்கள் திறமையுடன் பணியாற்ற உங்கள் பணிகளை திட்டமிட வேண்டும்.

உங்களின் அகந்தைப் போக்கு உங்கள் துணையுடனான பிணைப்பை பாதிக்கும். உங்கள் கடுமையான வார்த்தைகள் அவரை பாதிக்கும். உங்கள் பிரியமானவருடன் மகிழ்ச்சியாக இருக்க இதனை தவிர்த்தல் வேண்டும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. பண வரவிற்கான வாய்ப்பு குறைவு.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். முன்னேற்றம் பெறுவதற்கான வலிமையையும் உற்சாகமும் உங்களிடம் காணப்படும். இன்று அனைத்து விதத்திலும் செழிப்பாக இருக்கும்.

புதிய வாய்ப்புகளால் உற்சாகமும் திருப்தியும் காணப்படும். உங்கள் பணிகளை மகிழ்வுடன் செய்வீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள். இதனால் உங்கள் இருவருக்கும் இடையே நெருக்கம் அதிகரிக்கும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். ஸ்திரமான நிதிநிலை காணப்படும்.

மகிழ்ச்சியின் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சீரும் சிறப்புமாக இருக்கும்.




இன்றைய நாள் முழுஅளவிலான அனுகூலத்தை அளிக்காது. பலன்கள் தாமதமாக கிடைக்கும். உங்கள அர்ப்பணிப்பும் நீங்கள் கையாளும் முறையும் உங்களுக்கு உதவிகரமாக இருக்கும்.

பணிகளை திட்டமிட்டு அதன்படி செயல்படுத்தினால் கடைசி நிமிட அல்லல்களை தவிர்க்கலாம். அதனால் பதட்டமின்றி காணப்படலாம்.

நீங்கள் உங்கள் கணவன் ஃ மனைவிக்கு உற்ற துணையாக இருங்கள். உங்கள் இனிமையான வார்த்தைகளால் உற்சாகப்படுத்துங்கள். இதனால் உறவு வலுப்படும்.

சாதாரணமாக செய்யும் செலவை விட இன்று அதிகமாக செலவு செய்வீர்கள்.என்றாலும் பணத்தை பயனுள்ள நோக்கத்திற்காக செலவு செய்வீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 29.11.2024




இன்று உங்களுக்கு சிறப்பான நாள். உங்கள் அக்கம் பக்கத்தவரின் ஆதரவு கிடைக்கும். இன்று அனைத்தும் சிறப்பாக நடக்கும். இன்று நல்ல பலன்கள் கிடைக்கும்.

உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். அவர்கள் உங்களை பாராட்டுவார்கள். உங்கள் கடின உழைப்பு மற்றும் திறமை வெளிச்சத்திற்கு வரும்.

உங்கள் துணையுடன் விருந்து விசேஷங்களில் கலந்து கொள்ள வேண்டிய நேரம். இதில் நீங்கள் பங்கு கொண்டு மகிழ்வீர்கள். உங்கள் துணையிடம் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வீர்கள்.

வெளி நாட்டிலிருந்து பணம் கிடைக்க வாய்ப்புள்ளது. உங்களுக்கு தேவைப் படும் பொழுது அந்தப் பணம் கிடைக்கும்.




உங்கள் மனதில் சில இலக்குகளை கொண்டிருப்பீர்கள். அவைகளை செயலாற்றுங்கள். அதனை எளிய வழியில் அடையலாம். பயணத்தின் மூலம் ஆதாயம் கிடைக்கும்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். உங்கள் திறமைக்கு மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.பணிகளை உற்சாகமாக மேற்கொள்வீர்கள்.

நீங்கள் இருவரும் ஒருவரையொருவர் புரிந்து கொண்டதன் காரணமாக உங்கள் துணையுடன் நல்ல தொடர்பு கொண்டிருப்பீர்கள்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். கூடுதல் ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் கிடைக்கும்.

இன்று உங்களிடம் அதிக ஆற்றலும் சுறுசுறுப்பும் காணப்படும்.




உங்களுக்கு பயன் தரும் வகையிலான சரியான முடிவுகளை இன்று உங்களால் எடுக்க இயலும். இன்று நன்மைகள் நடைபெறும் நாள்.

நீங்கள் உங்கள் பணிகளை ஆர்வத்துடனும் உறுதியுடனும் ஆற்றுவீர்கள். சுய முயற்சி காரணமாக நன்மை அடைவீர்கள்.

நீங்கள் இன்று உங்கள் துணையுடன் விருந்துகளில் கலந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும். மேலும் சமூக வட்டாரத்தில் கலந்து பழக முடியம்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். நிதிகளில் முதலீடு செய்வது இன்று பலனளிக்கும்.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் இருக்கும் ஆற்றல் காணரமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




நீங்கள் உங்கள் ஆற்றல் மூலம் வெற்றி காண்பீர்கள். உங்கள் மனது தெளிவாக இருக்கும். எனவே உங்கள் செயல்களை சிறப்பாக ஆற்றுவீர்கள். உங்களின் உறுதி காரணமாகஇன்றைய நாளை கழிப்பது உங்களுக்கு எளிதாக இருக்கும்.

புதிய வேலை வாய்ப்புகளால் நம்பிக்கையுடனும் புத்துணர்ச்சியுடனும் இருப்பீர்கள். உங்கள் பணிகளை விரைந்து மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பு வயப்பட்ட நிலையில் இருப்பீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

இன்று உங்களிடம் போதிய பணம் காணப்படும். பணத்தைப் பொறுத்த வரை திருப்தியான நிலை இருக்கும்.

உங்களிடம் காணப்படும் தைரியம் காரணமாக இன்று நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.

